# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690
தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம்
*frmichaelsitaram@gmail.com*

உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பால் இயோ
*fryeopaul@gmail.com*

உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ்
*nithiya@catholic.org.sg*

பங்கு அலுவலகம்: *ololsec@gmail.com*
*ololpastoral@gmail.com*

28 ஜனவரி 2018 | பொதுக்காலம் 4ம் ஞாயிறு | இரண்டாம் ஆண்டு



# உங்கள் சிந்தனைக்கு

இயேசுவின் அன்புக்குரியவரே! இயேசு தலைசிறந்த ஆசிரியரும் போதகருமாக விளங்கினார். அவர் ஆற்றிய பணியில் முக்கியமான ஒன்று கற்பிக்கும் பணி என்றால் மிகையாகாது. முற்காலத்தில் இஸ்ரயேல் மக்களுக்கு மோசே கற்பித்ததுபோல, எசாயா போதித்ததுபோல, இயேசுவும் மக்களைத் தேடிச்சென்று அவர்களுக்குக் கடவுள் பற்றியும் கடவுளின் ஆட்சி பற்றியும் எடுத்துரைத்தார். இவ்வாறு போதிப்பதற்கு இயேசு தேர்ந்துகொண்ட இடம் யூதர்களின் தொழுகைக் கூடம். அதில் ஒன்று கப்பர்நாகும் ஊரில் இருந்தது. அவ்வூருக்கு இயேசு அடிக்கடி செல்வது வழக்கம். தற்கால அகழ்வாராய்ச்சியின் பயனாக அவ்வூர்த் தொழுகைக் கூடம் பற்றிய தடயங்கள் கிடைத்துள்ளன. இயேசுவின் போதனையைக் கேட்க மக்கள் குழுமி வந்தனர். இயேசு 'மறைநூல் அறிஞரைப் போலன்றி, அதிகாரத்தோடு அவர்களுக்குக் கற்பித்துவந்தார்' (மாற்கு 1:22) என்னும் குறிப்பு கருதத்தக்கது. இயேசுவின் போதனையில் அதிகாரம் இருந்தது என்பதன் பொருள் என்ன? இயேசு கடவுள் பற்றிய உண்மைகளை எடுத்துரைத்த வேளையில் வெறும் சொற்களை மட்டும் பயன்படுத்தவில்லை. விவிலியத்தில் கூறப்பட்டிருப்பதை மட்டுமே எடுத்துக் கூறவும் இல்லை. மாறாக, தம் தந்தையாகிய கடவுளோடு தமக்கிருந்த நெருங்கிய உறவின் ஆழத்தை மக்களோடு பகிர்ந்து கொண்டார்.

கடவுளோடு நமக்கிருக்கும் உறவு தந்தைக்கும் பிள்ளைக்கும் இடையே, தாய்க்கும் சேய்க்கும் இடையே நிலவுகின்ற உறவுக்கு ஒப்பானது. நாம் கடவுளையே முற்றிலும் சார்ந்திருக்கின்றோம். இயேசுவும் மக்களுக்குப் போதித்தபோது கடவுள் யார் என்பதைச் சொல்லாலும் செயலாலும் வெளிப்படுத்தினார். கடவுளைப் பற்றிப் பேசுவதற்கு மாறாக, கடவுள் யார் என்பதை இயேசு தம் வாழ்க்கையில் வெளிப்படுத்தினார். எனவே அவருடைய சொல்லுக்கும் செயலுக்கும் 'அதிகாரம்' இருந்தது. இயேசு கடவுளின் உறவை மனிதரோடு பகிர்ந்துகொண்டார். அந்த உறவை அனுபவித்தவர்கள் அவருடைய அதிகாரத்தையும் கண்டுகொண்டார்கள். இயேசு நம் ஆசிரியர் என்றால், அவரது பள்ளியில் பயில்கின்ற மாணவர் நாம் என்றால், அவரிடமிருந்த கற்றவற்றை நாம் கடைப்பிடிக்க வேண்டும். நாம் பெற்ற கல்வி அனுபவத்தைப் பிறரோடும் பகிர்ந்திட வேண்டும். இயேசுவின் போதனைகளை கேட்டு, ஏற்று, பகிர்ந்திட நம் இதயங்களைத் திறக்க வரம் வேண்டுவோம். வாழ்த்துகள். ஆசீர்.

## தூய லூர்து அன்னை ஆண்டுப் பெருவிழா 2018




**நவநாட்கள்:**
பெப்ரவரி 1 முதல் 9 வரை (ஆங்கிலம்)
நேரம்: மாலை 6:00 ~ செபமாலை (ஆங்கிலம்)
மாலை 6:30 ~ புகழ் ஆராதனை (ஆங்கிலம்)
மாலை 7:00 ~ திருப்பலி (ஆங்கிலம்)

03-02-2018 சனி ~ மாலை 6:00 & 7:30 ஆங்கிலத் திருப்பலி
04-02-2018 ஞாயிறு ~ காலை 7:30, 11:00 & 1:00 ஆங்கிலத் திருப்பலி
காலை 9:30 & மாலை 6:30 தமிழ் திருப்பலி

**திருவிழாத் திருப்பலி:**
பெப்ரவரி 10 சனி மாலை 6:00 (ஆங்கிலம்)
தொடர்ந்து அன்னையின் தேர் பவனி

**தமிழில் நவநாள் திருப்பலி:**
பெப்ரவரி 7, 8 & 9 (புதன், வியாழன் மற்றும் வெள்ளி)
நேரம்: இரவு 8:00 மணி

**நம் பங்குத் திருவிழாவை சிறப்பித்து அன்னையின் பரிந்துரையில் இறைவனின் அருள் பெற அன்புடன் அழைக்கிறோம்.**

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் இல்லத்திலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு.




## விபூதிப் புதன் திருப்பலி

நாள்: 14-02-2018 புதன்
நேரம்: மதியம் 12:30 மற்றும் மாலை 6:30 மணி (ஆங்கிலம்)
இரவு 8:00 மணி (தமிழ்)

**மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்!**

உங்கள் வீட்டிலுள்ள குருத்தோலைகளை ஆலயத்திலுள்ள கூடைகளில் வைக்க வேண்டுகிறோம்.

## சீனப் புத்தாண்டு திருப்பலி




15-02-2018, வியாழன் ~ இரவு 11 மணிக்கு ஆங்கிலத் திருப்பலி
16-02-2018, வெள்ளி ~ காலை 9 மணிக்கு ஆங்கிலத் திருப்பலி

காலை 10:30 மணிக்கு தமிழில் சிலுவைப்பாதையும்,
தொடர்ந்து தமிழில் திருப்பலியும் நடைபெறும்
(மதியம் 1 மணி முதல் ஆலய வளாகத்தின் இரும்புக் கதவுகள் மூடப்பட்டிருக்கும்)

## ஆலயத் துப்புரவு மற்றும் தூய்மைப் பணி






நாள்: 28-01-2018, ஞாயிறு
நேரம்: மதியம் 2:30 மணி
ஆலயத் துப்புரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு நமது ஆலயம்
மதியம் 2:30 முதல் 4:00 மணி வரை மூடப்பட்டிருக்கும்.
நம் ஆலயத்தைத் தூய்மைப்படுத்தத் தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கிறோம்.

## விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு முறை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ம் | ர | கா | தி | அ | க் | க | அ | ரு | ர் |
| கு | ட் | ன் | யே | வி | பே | டு | ரு | தீ | வ |
| நா | து | பே | சு | வி | தா | தோ | தா | கா | த |
| ர் | ச | ப் | ம் | வீ | ற | த் | செ | பி | கா |
| ப | றி | ரு | து | வு | டு | ன | தோ | சா | மா |
| ப் | க | ர | கா | ப | பே | ம | வ | க | ண |
| க | ட | வே | ப் | பி | ர | ழு | ம் | டு | ம |
| கி | க | ன | ரி | ர | ன் | மு | யா | வா | மெ |
| ள | டி | மா | ய | ம | பு | யா | டு | யி | கா |
| க | ற் | றி | த | கா | ரி | ரு | ளி | ல் | ன் |

1. என் வார்த்தைகளை அவனுடைய __________ வைப்பேன்.
2. என் வார்த்தைகளுக்குச் செவி கொடாதவனை நான் __________.
3. உங்கள் இதயத்தைக் __________. ஆண்டவர் குரலுக்குச் செவிசாய்ப்பீர்.
4. __________இருந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்.
5. __________ ஆண்டவருக்கு உரியவற்றில் அக்கறை கொள்கிறார்.
6. நீங்கள் __________ ஆண்டவரிடம் பற்றுக்கொண்டிருக்கவே இவ்வாறு சொல்கிறேன்.
7. இயேசுவும் அவர் சீடர்களும் __________ ஊரில் நுழைந்தார்கள்.
8. இது __________ கொண்ட புதிய போதனையாய் இருக்கிறதே!

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| முதலாம் வாசகம்: | இணைச்சட்டம் 18:15-20 |
| பதிலுரைப்பாடல்: | திருப்பாடல் 95:1-2, 6-7, 8-9 |
| பதிலுரை: உங்கள் இதயத்தைக் கடினப்படுத்தாதீர். ஆண்டவர் குரலுக்குச் செவிசாய்ப்பீர். | |
| இரண்டாம் வாசகம்: | 1 கொரிந்தியர் 7:32-35 |
| வாழ்த்தொலி: அல்லேலூயா! அல்லேலூயா! காரிருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர்மேல் சுடரொளி உதித்துள்ளது. அல்லேலூயா! | |
| நற்செய்தி வாசகம்: | மாற்கு 1:21-28 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| முதல் வெள்ளி (ஆங்கிலம்) : | மாலை 7:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை (ஆங்கிலம்) : | காலை 9:00 மணி |
| பொது விடுமுறை (தமிழ்) : | காலை 10:00 மணி |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 6:30 மணி<br>தொடர்ந்து திருப்பலி 7:30 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | இறைவாழ்வு செபக்குழு வழிபாடு : | ஞாயிறு இரவு 9:00 மணி |
| | லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:00 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடக் கட்டுமானத் திட்டமானது மறுபரிசீலனை செய்யப்படுகிறது. எனவே, மறு அறிவிப்பு வரும் வரை அதற்கான நிதி திரட்டும் முயற்சிகளை உயர்மறைமாவட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படிக் கேட்டுக்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்புமிக்கச் சகோதர சகோதரிகளே! நீங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே, உங்கள் கைத் தொலைபேசியை அமைதி நிலையில் வைக்கும்படியும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.